முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1130

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.11.2022, புதன்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
   ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
   தான தர்ம சக்தி கொண்டு உலகையே
   தன்னிகரில்லா ஞான பூமியாக்க அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே ஞான தேசிகனே
   ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   வரமென ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 16 ம் நாள் 02.11.2022 புதன்கிழமை)
   வழங்குவேன் உலகம் பேராற்றல்பெற
3. ஆற்றல்பெற இனிதே ஆறுமுகன் யான்
   அரங்கனுள் இருந்து அற்புதம் சில நடத்துகின்றேன்
   நடத்தவே அரங்கரை தொடர்ந்து
   ஞாலமதில் மக்களெல்லாம் தொண்டாற்றிவர
4. வருகவே அரங்கன் சன்மார்க்கமே
   வையகத்தை இனிதே பாதுகாத்து
   காத்துமே உலகமெங்கும் ஆறுமுகன் என் தலைமைகொண்ட
   ஆற்றல்மிக்க அரங்கன் தொண்டர்படை வழி
5. தொண்டர்படை வழி உலகமாற்றத்தை
   துரிதகதி செய்து ஆற்றல்கூடும்
   கூடவே இந்த வித காலம்
   குறையில்லா அரங்கன் வழி உலகோர்
6. நாடிவந்து சரணாகதி கொண்டு
   நன்மை வேண்டி நாமஜெபங்கள் போற்ற
   போற்றவே அரங்கன் ஆசிபட
   பூவுலகில் ஆறுமுகன் என் அருள் தயவு மிகுதியாகி
7. புண்ணியலோகமாக இந்த மாற்றம்
   பூவுலகம் கண்டு அரங்கனால் கலி இடர்கள் விலகி
   கலியுகம் ஞான யுகமாக மாற்றம் பெறும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–